டப்படுகிற காரணத்தால் கடல் அரிப்பு ஏற்படுகிறது என்று சொல்லப்படுகிறது. ஆகையால், மக்களை பாதுகாக்கவும், கடற்கரையைப் பாதுகாக்கவும் இந்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, தனிக் கேள்வி போட்டால் அந்தத் துறைக்கு பொறுப்பேற்றிருக்கிற அமைச்சர் விரிவான பதிலைத் தரமுடியும்.

## கலைவாணர் அரங்கம், சென்னை.

*வினா எண் 224— திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு செய்தி—அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை அரசினர் தோட்டத்திலுள்ள கலைவாணர் அரங்கிலிருந்த பேரறிஞர் அண்ணா, கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் ஆகியோரது படங்கள் அகற்றப்பட்டுள்ளனவா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, நெருக்கடி நிலை காலத்தில் அப்படி ஒரு செய்தி வெளியானது. இருந்தாலும் நீக்கப்படவில்லை என்பதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். கலைவாணர் அரங்கில் அவருடைய சிறப்புகளை விளக்கும் வகையில், அவருடைய வாழ்க்கையில் நடைபெற்ற சில சம்பவங்களை படங்களாக வரைந்து அங்கே வைக்கப்படுமா ? கலைவாணர் அரங்கை மேலும் மேம்படுத்த அவருடைய பெயரால் அங்கே ஒரு நூலகம் ஏற்படுத்தவும் கலை அரங்கத்தில் அவருடைய பெயரால் நாடகங்கள் நடத்தவும் நமது அரசு திட்டம் வைத்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, கலைவாணர் படம் இருக்கிறதா ? அகற்றப்பட்டுவிட்டதா என்பது கேள்வி. இதற்கு இல்லை என்று பதில் அளிக்கப்பட்டுவிட்டது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பல்வேறு விவரங்களை அரசுக்கு எடுத்து வைக்கிறார்கள். தனிக் கேள்வி போட்டால் விவரமாக பதில் சொல்ல வசதியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சென்னை மு. அரங்கநாதன் : தலைவரவர்களே, கலைவாணர் அரங்கில் திரைப்படம் போடுவதை ஒரு நபருக்கு தொடர்ந்து குத்தகை விடுவதாகவும், வேறு யாராவது குத்தகை எடுக்க வேண்டுமென்றால் அவரோடு தொடர்பு கொண்டுதான் குத்தகை எடுக்க முடியும் என்ற நிலை இருப்பதாச் சொல்லப் படுகிறது. இது அரசுக்குத் தெரியுமா ? ஏன் இந்த பாகுபாடு ? அதைப் போக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

[1979 மார்ச் 5

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, இதுவும் மூலக்கேள்விக்கு தொடர்பற்றது. என்றாலும் தனிப்பட்ட யாருக்கும் குத்தகை விடவில்லை ; அங்கே மேலாளர் இருக்கிறார் ; அவர்தான் அவ்வப்போது யார் யார் கேட்கிறார்களோ அவர்களுக்கு அனுமதி வழங்குகிறார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. பண்ணை சேதுராம் : தலைவரவர்களே, மூலக் கேள்விக்கும் நான் கேட்கின்ற கேள்விக்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சம்பந்தம் இல்லை என்று நீங்களேச் சொல்கிறீர்கள். அப்படியானால் ஏன் கேட்கிறீர்கள் ? உட்காரலாமே.

திரு. கே. பண்ணை சேதுராம் : தமிழ்நாட்டில் அனைத்து அரசு அலுவலகங்களிலும் பேரறிஞர் அண்ணா அவர்களின் படத்தை வைக்க அரசு ஆணையிடுமா? காவல் நிலையங்களில் வட நாட்டுத் தலைவர்களின் படங்களை வைத்திருக்கும்போது தென்னாட்டுத் தலைவர் அறிஞர் அண்ணாவின் படத்தை ஒவ்வொரு காவல் நிலையத்திலும் வைக்க அரசு ஆணையிடுமா ?

[முற்பகல் 9—30]

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, இந்தக் கேள்வியும் வேறு துறையைச் சேர்ந்த அமைச்சரிடத்திலே கேட்க வேண்டிய கேள்வி. ஆகவே, தனியாகக் கேள்வி போட்டால் நல்லது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அததோடு அறிஞர் அண்ணா அவர்களின் படத்தை வைக்க வேண்டும் என்று எல்லோருக்கும் ஆணை பிறப்பிக்கப் பட்டிருக்கிறது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வட நாட்டுத் தலைவர், தென்னாட்டுத் தலைவர் என்று குறிப்பிடாமல் இருப்பது நல்லது.

திரு. சென்னை மு. அரங்கநாதன் : பேரவைத் தலைவரவர்களே, தனிப்பட்ட ஒருவருக்குக் கொடுக்கப்படவில்லை என்று சொன்னார்கள். அப்படிக் கொடுக்கப்படுவதைக் குறிப்பிட்டு அதற்கான ஆதாரத்தையும் கொடுத்தால் அரசு நடவடிக்கை எடுத்து அதனை நீக்குவதற்கு வழிவகை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே நான் முன்னாலேயே சொன்னேன் இது மூலக் கேள்விக்குத் தொடர்பு இல்லாத கேள்வி என்று. இருந்தாலும் எந்த ஆதாரங்களை வேண்டுமானாலும் தரலாம். தவறுகள் இருந்தால்

1979 மார்ச் 5] [திரு ஆர். எம். வீரப்பன்]

திருத்தப்படும், அதற்கான நடவடிக்கையும் எடுக்கப்படும் என்பதைத தெரிவித்துக்கொள்வதோடு பூரணமான விபரம் என்னிடத்திலே இருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஜே. இராமசாமி : தலைவரவர்களே, கலைவாணர் என்.எஸ்.கே. அவர்களுடைய சீர்திருத்தக் கருத்துக்கள் பல இருக்கின்றன. ஆகவே, அவருடைய உருவப் படத்திற்கு முக்கியத்துவம் காட்டுவதை விட, ''பக்தி முக்கியம், அந்தக் காலம் படிப்பு முக்கியம், இந்தக் காலம் சாஸ்திரம் பார்ப்பது அந்தக் காலம் சரித்திரம் படிப்பது இந்தக் காலம்'' போன்ற அவருடைய சீர்திருத்தக் கருத்துக்களைக் கொண்ட திரைப்படங்களை ஒரு தொகுப்பாகத் தயாரித்து வெளியிட அரசுக்கு உத்தேசம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் யோசனை மிக நல்ல யோசனை. ஆனால் படங்களிலே இருந்து அப்படிப்பட்ட தொகுப்புக்களை எடுத்துச் சேர்ப்பது என்பது மிகச் சங்கடமான காரியம். இப்படி ஒரு முயற்சி முன்னாலே தொடங்கப் பட்டு அதிலே பல சங்கடங்கள் நேர்ந்த காரணத்தால் அம் முயற்சி தொடங்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜே. இராமசாமி அவர்கள் கலைவாணரைப் பற்றி ஒரு சினிமாப்படம் எடுக்கவேண்டும் என்று கூறினார்கள். அதிலே நடிப்பதற்கு சிறந்த நடிகர் திரு. ஜே. இராமசாமி அவர்கள் தான். ஆகவே, அவர்களை வைத்தே அப்படிப்பட்ட ஒரு படத்தை எடுப்பதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜே. இராமசாமியை நல்ல நடிகர் என்று தீர்மானித்து அவரை வைத்து படம் எடுக்கின்ற ஒரு படத் தயாரிப்பாளராக மாண்புமிகு உறுப்பினர் திரு. சாதிக் பாட்சா அவர்கள் மாறினால் அவரை வைத்து அந்த படத்தை எடுக்கலாம் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கோ. இளங்கோவன் : பேரவைத் தலைவரவர்களே, பேரறிஞர் அண்ணா அவர்களின் படத்தை அரசின் எல்லா அலுவலகங்களிலும் மீண்டும் வைக்கும்படி ஆணையிட்டிருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். அப்படி வைக்கப் படாத இடங்களைக் குறிப்பிட்டு அனுப்பினால் உடனடியாக நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, அப்படி யாராவது வைக்கவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தால் உடனடியாக கண்டிப்பான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. மருதாசலம் : தலைவரவர்களே, கலைவாணர் அரங்கத்தின் முன்னாலேயே கலைவாணா அவர்களின் நினைவாக சிலை அமைக்க ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, கலைவாணர் அரங்கமே கலைவாணருக்கு நினைவுச் சின்னமாகத்தான் இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே, அங்கே வேறொரு நினைவுச்சின்னம் தேவையில்லை என்பது அரசினுடைய கருத்து.

கோவை நகரததில் புறவழிச்சாலை.

* வினா எண். 225— திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சா கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கோவை உக்கடத்திலுள்ள வாலங்குளம் வழியாக, கோவை பாலக்காடு தேசிய நெடுஞ்சாலையிலிருந்து பேரூர் பாதை வரை குறுக்கு வழியாக (பை-பாஸ்)பாதை போடப்பட்டு, பாதியில் நிறுத்தப்பட்டுள்ளது ஏன் ?

(ஆ) மீண்டும் நிறைவேற்ற அரசு திட்டமிட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) & (ஆ) இப்போதைக்கு தேவைப்படும் நிலத்தில் ஒரு பகுதியை தனியாரிடமிருந்து பெறவும் மற்றும் ஒரு பகுதி அரசு நிலத்தை உரிமை மாற்றம் பெறவும் கோவை நகராட்சி நடவடிக்கை எடுத்து வருகிறது. இந்தப் பணி முடிந்ததும் தான் நகராட்சி வேலையைத் துவக்கும்.

திரு. ஆ. நடராசன் : பேரவைத் தலைவரவர்களே, இந்தத் திட்டம் போடப்பட்டு எவ்வளவு ஆண்டுக்காலம் ஆகிறது? நீண்டகாலமாக கிடப்பிலே போடப்பட்டிருக்கின்ற காரணத்தால் இதை உடனடியாக நிறைவேற்ற அரசு முயற்சிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன். அத்தோடு இந்தத் திட்டத்தின் மதிப்பீடு எவ்வளவு என்பதையும் அறிய விரும்புகிறேன்.